**In the Court of the District Munsif, Eraniel**

O.S.No.138/2012 தேதி-01.02.2025

(P.W.1) - ரமேஷ்

**3** மற்றும் **4** -ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. மும்பையில் நான் எத்தனை வருடமாக இருக்கிறேன் என்றால் 9 வருடங்களாக உள்ளேன். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் Elevator கம்பெனியில் வேலைபார்த்து வருகிறேன். இதற்கு முன்பு நான் எங்கு வேலை செய்து வந்தேன் என்றால் தாம்பரத்தில் வேலை பார்த்து வந்தேன். சென்னையில் நான் எப்போது வரை வேலை செய்து வந்தேன் என்றால் 2013 முதல் 2014 வரை. நான் சென்னையில் வேலை பார்ப்பதற்கு முன்பு கூடங்குளத்தில் வேலைபார்த்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆண்டுகளில் நான் சென்னையிலும் தற்போது மும்பையிலும் வாழ்ந்து வருகிறேன் என்றால் சரிதான். என் ஊரில் உள்ள முருகன் கோவில் வரி உள்ளதா என்றால் உள்ளது. மேற்சொன்ன முருகன் கோவிலுக்கு நான் ஊருக்கு வரும்போதெல்லாம் வழிபடுவது என் வழக்கம் என்றால் சரிதான். மேற்சொன்ன முருகன் கோவில் சுப்பிரமணியன்புரம் கிராமத்தில்தான் உள்ளது என்றால் சரிதான். வேறு ஏதாவது கோவிலில் எனக்கு வரி உண்டா என்றால் இல்லை.

2. சுப்பிரமணியன்புரத்தில் உள்ள முருகன் கோவில் எத்தனை வருடங்கள் பழமையானது என்றால் 100 வருடங்களுக்குமேல் பழமையானதாகும். மேற்சொன்ன கிராமம் நெட்டாங்கோடு ஊராட்சிக்குட்பட்ட பகுதி என்றால் சரிதான். மேற்சொன்ன சுப்பிரமணியன்புரத்தை தாண்டி ஒரு சிவன் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன கோவில் உள்ள ஊர் நங்கன்விளை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வரைபடத்தில் உள்ள கிராமங்கள் அனைத்தும் சரியானதா என்றால் சரியானதுதான். அந்த வரைபடம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள புலியடி விளை செல்லும் சாலையிலிருந்து வடக்கில் உள்ள செருப்பங்கோடு கம்பி பாலம் வரை செருப்பங்கோடு என்பதை திருத்தம் செய்து நங்கன்விளை கிராமம் என்று பெயர் மாற்றம் செய்துதரவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் பரிகாரம் கோரியுள்ள பகுதிகளில் எத்தனை சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 2/62 முதல் சர்வே எண் 2/90A வரை.

(P.W.1) - ரமேஷ்

**3** மற்றும் **4 -**ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

3. மேற்சொன்னவாறு எத்தனை சர்வே எண்கள் உள்ளது என்று நான் விளம்புகை பரிகாரம் கேட்ட பகுதிக்குட்பட்டு வருகிறது என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலோ அல்லது வாதுரையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் எந்த இடத்தை பொறுத்து பரிகாரம் கோரியுள்ள நிலையில் என்னுடைய வாதுரையில் வழக்கு பட்டிகை சொத்தாக புல எண்களையோ விஸ்தீரணத்தையோ மற்றும் எல்கைகளையோ ஏதேனும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய வாதுரையில் 7 நபர்களின் ஆவணங்களில் உள்ள இடத்தை மாற்றி தர வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன 7 நபர்களை நான் வழக்கில் கட்சியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை, ஊர் தலைவரை மட்டுமே கட்சியாக சேர்த்துள்ளேன். நான் குறிப்பிட்டுள்ள 7 நபர்களில் முதல் நபரான சீனிவாசன் என்பவர் செருப்பங்கோடு என்ற ஊரில் எத்தனை வருடங்களாக வசித்து வந்தார் என்றால் சுமார் 40 வருடங்களாக வசித்துவந்தார். அதேபோல் செல்லத்தங்கம் என்பவர் சுமார் 30 வருடங்களாக வசித்துவந்தார்.

4. சுப்பிரமணியன் என்பவர் சுமார் 40 வருடங்களாக அதேபகுதியில் வசித்துவருகிறாரா என்றால் சுமார் 15 வருடங்களாகும். அதேபோல் செல்லத்துரை என்பவர் மேற்படி முகவரியில் 40 வருடங்களாக வசித்து வருகிறார் என்றால் 30 வருடங்களாக அங்கு ஒரு கடை சொந்தமாக வைத்திருந்தார்.செல்வராஜ், ராஜன், நாராயணன் ஆகியோர்களும் அதே பகுதியில் 40 வருடங்களாக வசித்து வருகிறார்கள் என்றால் சுமார் 20 வருடங்களாக வசித்து வருகிறார்கள். மேற்சொன்ன நபர்களை சேர்த்து 23 வீடுகள் உள்ளது என்றால் அவ்வாறு இல்லை, 8 முதல் 9 வீடுகள்தான் உள்ளது. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பகுதியில் மொத்தம் எத்தனை கோவில்கள் உள்ளது என்றால் 3 கோவில்கள் உள்ளது. மேற்சொன்ன பகுதியில் மரக்கடை ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. மேற்சொன்ன 3 கோவில்களின் நிர்வாகிகளையோ அல்லது அப்பகுதியில் உள்ள கடையின் நிர்வாகிகளையோ வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்ய நான் நீதிமன்ற ஆணையரை நியமிக்க ஏதேனும் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர்

(P.W.1) - ரமேஷ்

<u>**3** மற்றும் **4** -ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

வழக்கில் கோரியுள்ள பரிகாரத்திற்குட்பட்ட பகுதியை பார்வையிட்டால் அதனுடைய சர்வே எண் மற்றும் எல்கைகள் மற்றும் அப்பகுதியின் தன்மைகள் தெரிந்துவிடும் என்பதால் நீதிமன்ற ஆணையர் அமைக்க எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. இரட்டைக்கரை சாணல் வருவதற்கு முன்பாக செருப்பங்கோடு கிராமம் ஒரே பகுதியாக இருந்தது என்றாலும் நடுவில் மேற்சொன்ன சாணல் வந்த பிறகு கிழக்கு மேற்காக அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சாணல் இடையில்தான் உருவானது அதற்கு முன்பு நங்கன்விளை ஊராக இருந்தது என்று என் முன்னோர்கள் சொல்லி தெரியும். அருள்மிகு ஊசிக்காட்டு சிவ சுடலைமாடசாமி திருக்கோவில் 500 ஆண்டுகள் பழமையானது என்றால் சுமார் 100 ஆண்டுகள் பழமையானதாகும். சுப்பிரமணியன்புரம் முருகன் கோவிலுக்கு முன்பிருந்தே மேற்சொன்ன அருள்மிகு ஊசிக்காட்டு சிவ சுடலைமாடசாமி திருக்கோவில் உள்ளது. 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த மேற்சொன்ன கோவிலானது இன்றுவரை செருப்பங்கோடு பகுதி என்றுதான் உள்ளது என்று சொன்னால் செருப்பங்கோடு ஊர்வகை என்று இருந்தது. மேற்சொன்ன அருள்மிகு ஊசிக்காட்டு சிவ சுடலைமாடசாமி திருக்கோவிலுக்கு முன்பு சாணல் உள்ளது என்றாலும் அதற்கு எதிர்புறம் ஒரு கிறித்துவ தேவாலையம், செருப்பங்கோடு உள்ளது என்றால் சரிதான்.

6. மேற்சொன்ன சாணல் வழியே ஆலன்விளை நோக்கி செல்லும்போது ஒரு பாலம் உள்ளது என்றால் சரிதான், அப்பாலத்தின் அருகே ஒரு பேருந்து நிறுத்தம் உள்ளது என்றால் சரிதான். அப்பேருந்து நிறுத்தம் செருப்பங்கோடு பேருந்து நிறுத்தம் என்றுதான் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 08.08.2018 அன்று நான் குறிப்பிட்டு சொல்லக்கூடிய பகுதிகள் புல எண் 215, 216, 217-ல் செருப்பங்கோடு கிராமத்திற்குட்பட்ட பகுதி என்று குருந்தன்கோடு-அ கிராம நிர்வாக அலுவலரால் சான்றளிக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் வரைபடத்தில் உள்ள புதிய சர்வே எண் 217-ல் அருள்மிகு ஊசிக்காட்டு சிவ சுடலைமாடசாமி திருக்கோவிலுக்குட்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2020-வரையிலும் அப்பகுதியில் வசிக்கும் நபர்கள் மற்றும் கடைகளுக்கு செருப்பங்கோடு என்றே வரி வசூலிக்கப்பட்டது என்றாலும் என்னுடைய

(P.W.1) - ரமேஷ்

3 மற்றும் 4 -ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி
செயல்களினால்தான் செருப்பங்கோடு கிராமத்திற்கு ஆவணங்கள் வழங்குவது நிறுத்திவைக்கப்பட்டது என்றால் சரியல்ல. ரவீந்தர் என்பவர் வட்டார வளர்ச்சி அலுவலர்க்கு அனுப்பிய மனுவின் அடிப்படையில் வட்டார வளர்ச்சி அலுவலர் செருப்பங்கோடு என்ற பெயரிலேயே வரி ரசீது வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

7. ரவீந்தர் அவர்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.No.7908/2021 என்ற வழக்கில் நீதிமன்றமானது 4 வாரத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என்று ஊராட்சிமன்ற தலைவருக்கு கூறியுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆணையின்படி 19.07.2021-ல் வட்டார வளர்ச்சி அலுவலர் நெட்டாங்கோடு ஊராட்சி தலைவருக்கு நீதிமன்ற அவமதிப்பு ஏற்படாதவாறு நீதிமன்ற தீர்ப்பாணை கிடைக்கப்பெற்ற 4 வாரத்திற்குள் தனியாருக்கு வீட்டு வரி மற்றும் கதவு எண் நிர்ணயம் செய்து வழங்கி அதன் விவரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவித்திடவேண்டும் என்றும் இதனால் ஏதேனும் நீதிமன்ற அவமதிப்பு ஏற்படும் பட்சத்தில் அதற்கு ஊராட்சிமன்ற தலைவர் பொறுப்பாவார் என்று தெரிவிக்கப்பட்டு இக்கடிதம் வழங்கப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போது சாட்சி தெரியாது என்று மாற்றி சொல்கிறார்.

8. 2017-ல் சுப்பிரமணியன் என்பவர் தகவல்அறியும் உரிமைச்சட்டம்-2005-ன் கீழ் செருப்பங்கோடு முகவரியில் எத்தனை வீடுகள் உள்ளது என்று கேட்கப்பட்டதற்கு 13 வீடுகள் உள்ளதாக தகவல் வழங்கப்பட்டுள்ளது. 21.12.2011-ல் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் அடிப்படையில் நெட்டாங்கோடு ஊராட்சியில் செருப்பங்கோடு பகுதியில் வசிக்கும் சுப்பிரமணிய நாடாருக்கு வீடு வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

(ஒப்பம்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணயில் (பொறுப்பு)